www.Padasalai.Net www.CBSEtips.in

Ts-12T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2022

## வகுப்பு 12

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 45

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக:** **10×1=10**

1) தண்டியலங்காரம் எழுத காரணமான நூல்
   அ) தொல்காப்பியம் ஆ) காவியதர்சம்
   இ) முத்துவீரியம் ஈ) இவற்றில் எதுவுமில்லை
2) பாடலின் தளத்தை பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது
   அ) ஒலிக்கோலம் ஆ) சொற்புலம்
   இ) தொடரியல் வடிவம் ஈ) சொற்றொடர் நிலை
3) உலக சுற்றுச்சூழல் நாளாக கொண்டாடப்படும் தினம் எது?
   அ) ஜுன் 2 ஆ) ஜுன் 5 இ) ஜுன் 6 ஈ) ஜுன் 8
4) பகலும் இரவும் சந்திக்கும் ............... அழகு.
   அ) அந்தி ஆ) இரவு இ) வைகறை ஈ) பிற்பகல்
5) கூதிர்ப்பருவம் ...............
   அ) ஆவணி, புரட்டாசி ஆ) மார்கழி, தை
   இ) மாசி, பங்குனி ஈ) ஐப்பசி, கார்த்திகை
6) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ...............
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும்
   இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்
7) கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உள்ளடக்கியது?
   அ) மூன்று ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு
8) தமிழில் பால் பாகுபாட்டை அறிய முடியாத இடங்கள் எவை?
   அ) முன்னிலை, தன்மை ஆ) தன்மை, படர்க்கை
   இ) முன்னிலை, படர்க்கை ஈ) தன்மை, முன்னிலை
9) **இலக்கணக்குறிப்பு தருக:**
   அ) வெங்கதிர் ஆ) பொய்யா
10) **உவமைத் தொடர்களை சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:**
   அ) தாமரை இலை நீர் போல ஆ) அச்சாணி இல்லாத தேர் போல

**II. எவையேனும் நான்கினுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **4×2=8**

11) அணியிலக்கணத்தை கூறும் இலக்கண நூல்கள் யாவை?
12) பசுமைக் குடில் வாயுக்கள் எவை?
13) எவற்றை நாம் வரவேற்று விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்று ஜலாலுத்தீன் ரூமி கூறுகிறார்?
14) மணந்தகம் என்றால் என்ன?
15) மறக்கக்கூடாதது, மறக்கக்கூடியது எவற்றை?
16) [illegible]

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**III. எவையேனும் நான்கினுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **4×4=16**

17) நடை அழகியல் குறித்து தொல்காப்பியம் கூறும் கருத்தை எழுதுக.

18) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

19) பரலி சு. நெல்லையப்பர் எழுதிய நூல்களை எழுதுக.

20) சடாயுவை தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

21) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

22) உயர்திணைப் பன்மைப்பெயர்கள், பன்மைவிகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களைக் கூறுக.

**IV. விடை தரவும்:** **4+2=6**

23) ''ஓங்கலிடை வந்து'' எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

24) ''நன்றி'' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**V. எவையேனும் ஒன்றுக்கு விடை தரவும்:** **1×5=5**

25) நெடுநெல்வாடையில் நக்கீரர் கூறும் மழைக்கால வருணனையை விவரி.

**(அல்லது)**

26) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரை தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை 'முதல்கல்' சிறுகதை வழியே விளக்குக.

**(அல்லது)**

27) தாயும் தந்தையும் பணிக்கு செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

-----------

சிவக்குமார். மு. பதிராம் மெட்ரிக் மே. நி.ப, வல்லம்-627809
9943340047.

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com